தமிழ்நாடு அரசு

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை

வட்டாட்சியர் அலுவலகம், திருநெல்வேலி வட்டம்,

திருநெல்வேலி மாவட்டம்.

அறிவிக்கை எண்.1/2025 நாள்:14.07.2025

திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலகில், திருநெல்வேலி வட்டத்தில் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இடஒதுக்கீடு, கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட நபர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

| | |
|---|---|
| விண்ணப்பங்கள் பெறப்படும் நாள். | 17.07.2025 முதல் |
| விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள். | 16.08.2025 மாலை 5.45 மணி வரை |
| பதவியின் பெயர் : | கிராம உதவியாளர். |
| சம்பள விகிதம் : | சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.11,100 - 35,100/- |
| வட்டத்தின் பெயர்: | திருநெல்வேலி |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | 06 |

| வ.எண் | நிரப்பப்பட உள்ள கிராமத்தின் பெயர் | காலியிடத்தின் எண்ணிக்கை | இனசுழற்சி மற்றும் விவரம் |
|---|---|---|---|
| 1. | 20. கட்டளைஉதயனேரி | 1 | 44. பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்டோர் முஸ்லீம்கள் தவிர முன்னுரிமை பெற்றவர்கள்) Backward Classes (other than Backward Classes -Muslims) Priority |
| 2. | 57. சிந்துபூந்துறை கிராமம் | 1 | 45. பொதுப்பிரிவினர் முன்னுரிமை அற்றவர்கள் (General Turn - Non Priority) |
| 3. | 41. சிறுக்கன்குறிச்சி கிராமம் | 1 | 46.மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (முன்னுரிமை அற்றவர்கள்) முன்னாள் ராணுவத்தினர் தமிழ் வழி கல்வி Most Backward Classes and Denotified Communities - Ex. Service Man Non Priority Tamil Medium |
| 4. | 51. சேந்திமங்கலம் கிராமம் | 1 | 47. பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்டோர் முஸ்லீம்கள் தவிர முன்னுரிமை அற்றவர்கள்) பெண்கள் Backward Classes (other than Backward Classes -Muslims) Non Priority (Women) |
| 5. | 69. சங்கன்திரடு கிராமம் | 1 | 48. பொதுப்பிரிவினர் முன்னுரிமை அற்றவர்கள் தமிழ் வழி கல்வி (பெண்கள்) (General Turn) Non Priority (Women) Tamil Medium |
| 6 | 62. மேகமுடையார்குளம் கிராமம் | 1 | 49. பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்டோர் முஸ்லீம்கள் தவிர முன்னுரிமை அற்றவர்கள்) Backward Classes (other than Backward Classes -Muslims) Non Priority |

தகுதிகள்

| | | |
|---|---|---|
| கல்வித் தகுதி | 1. 10-ஆம் வகுப்பில் தேர்ச்சி அடைந்தவர்களும், தோல்வி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். தமிழ் மொழியை கட்டாய பாடமாக கொண்டு 10ஆம் வகுப்பு தேர்வு எழுதியிருக்க வேண்டும்.<br>2. 10 - ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் (தேர்ச்சி/தோல்வி) வைத்திருக்க வேண்டும்.<br>3. மேலும், தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். | |
| இதர தகுதிகள் | 1. விண்ணப்பதாரர் திருநெல்வேலி வட்டத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும்.<br>2. தேர்வு செய்யப்படுபவரின் நடத்தை குறித்தும் முந்தைய குற்றப் பின்னணி குறித்தும் நியமன அலுவலர் அறிந்து திருப்தி அடைய வேண்டும்.<br>3. அடிப்படை விதி 10 இன் படி உடற்தகுதி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். | |
| வயது வரம்பு | குறைந்தபட்ச வயது | 21 வயது (அனைத்து பிரிவினருக்கும்)<br>(அறிவிக்கை நாளன்று அன்று 21 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.) |
| | அதிகபட்ச வயது | 32* வயது (பொதுபிரிவினர்)<br>37* வயது - பிற்படுத்தப்பட்டோர் / பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பட்டியல் வகுப்பினர், பட்டியல் வகுப்பினர்(அருந்ததியர்) / பழங்குடியினர். |
| | மாற்றுத் திறனாளிகளுக்கு | அதிகபட்ச வரம்புடன் 10 ஆண்டுகள் கூடுதலாக தளர்வு வழங்கப்படும். |
| | முன்னாள் இராணுவத்தினருக்கு | 48 வயது – பொதுபிரிவினர்<br>53 வயது – பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பட்டியல் வகுப்பினர், பட்டியல் வகுப்பினர்(அருந்ததியர்) / பழங்குடியினர்.<br>(* அரசாணை (நிலை) எண். 91, மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள். 13.09.2021-ன்படி வயது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது) |
| விண்ணப்பிக்கும் முறை | கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை திருநெல்வேலி மாவட்டத்தின் அதிகாரப்பூர்வமான இணையதளமான https://tirunelveli.nic.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களுடன் திருநெல்வேலி வட்டாட்சியர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ அனுப்பப்பட வேண்டும். | |

வட்டாட்சியர் அலுவலக முகவரி
வட்டாட்சியர் அலுவலகம்,
திருநெல்வேலி,
Pin Code: 627 001.

கோட்டாட்சித் தலைவர்
திருநெல்வேலி

வருவாய் வட்டாட்சியர்,
திருநெல்வேலி.